இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 21-09-2024

# மலர்க மாநில சுயாட்சி - 2

**இன்னொன்றையும் சொன்னார் டி.எம்.நாயர்!**

**‘அனுப்பி வைக்கப்படும் ஆளுநர்களுக்கு எதுவும் தெரியாது’ என்று அன்றே கண்டுபிடித்துச் சொன்னவர் டி.எம்.நாயர்தான். “பதவியில் இருக்கும் ஆளுநர்களுக்கு மற்றவர்களின் நிலையைக் கண்டறியும் வாய்ப்பு இல்லை. அடக்கி ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் கோடிக்கணக்கான மக்களின் நிலையை அவர்களால் உணர முடியாது” என்று அன்றே சொன்னார் டி.எம்.நாயர். ‘ஆட்டுக்குத் தாடி எதற்கு? நாட்டுக்கு ஆளுநர் எதற்கு?’ என்று புரியும் மொழியில் இதனைத்தான் சொன்னார் பேரறிஞர் அண்ணா.**

மாண்டேகு - செம்ஸ்போர்டு குழுவினரைச் சந்தித்து, ‘மாநிலங்களை நிர்வாக வசதிக்காக மாற்றியமைக்க வேண்டும். மொழி அடிப்படையில் மாற்றம் செய்ய வேண்டும் - இது அவசியமானது. தற்போது இந்திய அரசிடம் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். இவற்றில் பலவற்றை மாநில அரசுகளின் பொறுப்பில் விட வேண்டும். இதை நிறுவினால்தான் கூட்டாட்சி முறை ( Federal system) வெற்றி பெற முடியும்” என்று சொன்னார் டி.எம்.நாயர். இதனைத்தான் சுதந்திர இந்தியாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கையில் எடுத்தார்கள்.

1963 சனவரி 25 ஆம் நாள், பிரிவினைத் தடைச் சட்ட மசோதாவுக்கான அரசியல் சட்டத் திருத்தத்தை எதிர்த்து மாநிலங்களவையில் அண்ணா பேசினார். “நாம் ஒரு கூட்டாட்சி அமைப்பை ஏற்றிருக்கிறோம், அதனை ஒரு துணைக் கண்டம் என்று அழைக்கிறோம், இதற்கு ஒற்றையாட்சி அமைப்பை ஏற்க முடியாது, இந்த நாடு மாறுபட்ட வரலாறுகளையும் பலதிறப்பட்ட மனோபாவங்களையும் கொண்டது” என்பதை விரிவாக விளக்கி வந்த அண்ணா, “நமது அரசமைப்புச் சட்டத்தின் கூட்டாட்சி முறையிலுள்ள பல ஒற்றைத் தன்மைகளை எதிரித்துப் போரிடுகின்ற ஒரு தாக்குதல் முன்னணியாக நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கருதிக் கொள்ள வேண்டுகிறேன்” என்று பேசினார்.

மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்தி, அதற்கேற்ப இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதை 1967 தேர்தல் அறிக்கை முதல் இன்று வரை தி.மு.கழகம் வலியுறுத்தி வருகிறது.

“மாநில உரிமைகளைப் பாதுகாத்திடும் முறையிலும் குறிப்பிடப்படாத மிச்ச அதிகாரங்கள் மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முறையை மாற்றி அவை மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதற்காகவும் கழகம் பாடுபடுவதுடன் அந்த நோக்கத்துடன் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறது” என்று 1967 தேர்தல் அறிக்கை கூறியது.

இறுதிக்காலத்தில் மரணப் படுக்கையில் இருந்தபோதும், மாநில சுயாட்சிக்காகவே எழுதினார் அண்ணா. அதிகாரமற்ற முதலமைச்சர் பதவியில் தனக்கு மகிழ்ச்சி இல்லை என்பதையும் அண்ணா சொன்னார்.

**“வெற்றுத்தாளில் கூட்டாட்சி சார்புடையது எனக்கூறி நடைமுறையில் மத்திய அரசிற்கு மென்மேலும் அதிகாரங்களைக் குவித்துக் கொண்டிருக்கிற நமது அரசியல் சட்டத்தின் கீழியங்கும் ஒரு மாநிலத்திற்கு நான் முதலமைச்சர் என்பதில் சிறிதும் மகிழ்ச்சி அடையவில்லை” என்று எழுதினார்.**

‘அண்ணாவின் உயில்’ என்று போற்றப்படும் கட்டுரை இது. அண்ணாவின் உயிலாக, உயிராக இருந்தது மாநில சுயாட்சிதான்!

மாநில அரசுகள் எந்த எந்த அதிகாரங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதையும், ஒன்றிய அரசிடம் எப்படிப்பட்ட அதிகாரங்களை ஒப்படைக்கலாம் என்பதையும் விவாதத்திற்குப் பயன்படும் வகையில் முதலமைச்சர் கலைஞரின் அரசால் இராஜமன்னார் குழு 1969 செப்டம்பர் 22 அன்று அமைக்கப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசராகவும், நான்காவது நிதிக்குழுவின் தலைவராகவும் இருந்தவர் மாண்புமிகு இராசமன்னார் அவர்கள். இக்குழுவில் சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ஏ.இலட்சுமணசாமி ( ஆர்க்காடு இரட்டையர்களில் ஒருவர்), சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் பி.சந்திரா ஆகியோர் இடம்பெற்று இருந்தார்கள். 27.5.1971 அன்று இராசமன்னார் குழு தனது அறிக்கையை அளித்தது. இந்தியாவிலேயே ஒரு மாநில அரசு, மாநில சுயாட்சிக்காக அமைத்த முதல் குழு இதுதான்.

16.4.1974 அன்று மாநில சுயாட்சித் தீர்மானம் தமிழகச் சட்டமன்றத்தில் முதல்வர் கலைஞரால் கொண்டு வரப்பட்டது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்தத் தீர்மானம்:

**“மாநில சுயாட்சி பற்றியும், இராசமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும் தமிழ்நாடு அரசின் கருத்துரைகளையும், இராசமன்னார் குழுவின் அறிக்கையையும் இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு; பல்வேறு மொழி, நாகரிகம், பண்பாடு, ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்புகொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும் - மாநில சுயாட்சி பற்றியும் இராசமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துரைகளை மத்திய அரசு ஏற்று மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது” -**

- என்ற தீர்மானம் 20.4.1974 அன்று சட்டப்பேரவையிலும், 27.4.1974 அன்று மேலவையிலும் நிறைவேறியது.

அதுவரை அரசியல் கட்சிகளால் அரசியல் அரங்குகளில் ஒலித்த மாநில சுயாட்சிக் குரல், ஒரு மாநில அரசாங்கத்தால் சட்டமன்றத்தின் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. அத்தகைய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கே உண்டு.

தி.மு.க.வால் மட்டுமே அன்று ஒலிக்கப்பட்ட மாநில சுயாட்சிக் குரல் இன்று பல்வேறு மாநிலங்களில் ஒலிக்கத் தொடங்கி இருப்பதைப் பார்க்கிறோம். இதுவும் கூடுதல் பலமாக அமைந்துள்ளது.

**முன்பைவிட பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் அதிகாரம் இப்போது மையப்படுத்தப் பட்டுள்ளது. ஆணவம் அதிகார மையம் ஆகி உள்ளது. எதேச்சதிகாரம் கோலோச்சுகிறது. ஒற்றைத் தன்மையே ஒரே தன்மையாக ஆகி வருகிறது. அதே நேரத்தில், பா.ஜ.க. அரசு முழு வலிமை வாய்ந்த அரசும் அல்ல. பலவீனமான அரசு. இந்தநிலையில் மாநில சுயாட்சியின் குரல் இந்தியக் குரலாக மாற வேண்டும்.**

**மலரட்டும் மாநில சுயாட்சி!**

**தோன்றட்டும் இந்தியக் கூட்டாட்சி!**

---

“ஒரே நாடு ஒரே தேர்தல்” திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு எதிரொலி!

## அனைத்துக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை!

### ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் குழு அமைப்பு!

புதுடெல்லி, செப். 21 - ஒன்றிய பா.ஜ.க. அரசின் “ஒரே நாடு ஒரே தேர்தல்” திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், அனைத்துக் கட்சிகளிடம் பேச்சு வார்த்தை நடத்த ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் 3 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்திற்கு காங்கிரஸ், தி.மு.க., சமாஜ்வாதி கட்சி, திருணாமுல் காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தளம், இடதுசாரி கட்சிகள் உள்ளிட்ட பெரும்பான்மை கட்சிகள் அனைத்தும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டம் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்றும், கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது என்றும் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

இந்நிலையில், இத்திட்டம் தொடர்பாக அனைத்து கட்சிகளிடமும் பேச்சு வார்த்தை நடத்த ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங், கிரண் ரிஜிஜு, அர்ஜுன் ராம் மெக்வால் ஆகியோரை ஒன்றிய அரசு நியமித்துள்ளது. மேலும் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்ட மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக் குழுவிற்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.9.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வஃக்ப் வாரிய உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள டாக்டர் அ. சுபேர் கான் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

---

திருவல்லிக்கேணி- நடுக்குப்பம் பகுதியில் மீன் அங்காடி -

## கைப்பந்து விளையாட்டு மைதானம் - உள்விளையாட்டு அரங்கம்!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, செப்.21- பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு - 120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் மூலதன நிதியின் கீழ், ரூ.26.42 இலட்சம் மதிப்பில் புனரமைத்து மேம்படுத்தப்பட்ட மீன் அங்காடியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.09.2024) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

நடுக்குப்பம் மீன் அங்காடியானது 218.10 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இங்கு இரும்பு படிக்கட்டுகள் மற்றும் கழிவுநீர் செல்வதற்கான வசதிகள் புதிதாக அமைக்கப்பட்டு, தண்ணீர் வசதி, மின்வசதி மற்றும் கழிப்பறை வசதி மேம்பாடு உள்ளிட்ட புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், நடுக்குப்பம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், சைல்ட்லைஃப் (Child Life NGO) தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பங்களிப்புடன் ரூ.41 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட கைப்பந்து விளையாட்டு மைதானம் மற்றும் கேரம், டேபிள் டென்னிஸ், இறகுப்பந்து, உடற்பயிற்சிக் கூடம் மற்றும் சதுரங்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய உள்விளையாட்டு அரங்கத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

பின்னர், அப்பகுதியில் உள்ள குழந்தைகள் மையத்தில் ஆய்வு மேற்கொண்டு, குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கி கலந்துரையாடினார்.

முன்னதாக, நடுக்குப்பம் பகுதியில் உள்ள சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சைல்ட்லைஃப் (Child Life NGO) தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திருமதி சாந்தி ராஜசேகரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ.விஜயாராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

காஞ்சிபுரத்தில் 28–ஆம் தேதி கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றும்

## கழக பவள விழா கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட கழகத்தினர் ஆயிரக்கணக்கில் அணி திரள்வோம்!

### மாவட்ட கூட்டத்தில் முடிவு - கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், செப் 21- காஞ்சிபுரத்தில் வருகிற 28-ஆம் தேதி தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் கழக பவள விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில், இதுவரை இது போன்ற பிரம்மாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது இல்லை என்று அரசியல் வரலாற்றில் புதியதோர் சரித்திர சாதனை படைத்திடும் வகையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த கழகத்தினரும் அலைகடலென ஆர்ப்பரித்து திரண்டு வந்து பங்கேற்று புதியதோர் வரலாற்று சாதனையை படைப்போம் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் ஆலந்தூர் கத்திப் பாரா ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் த. துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து. மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ. வைதியலிங்கம், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ. தமிழ் மணி, ஆர்.டி.அரசு, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், த.ஜெயக்குமார், வே.கருணாநிதி, இ. ஜோசப் அண்ணாதுரை, எஸ்.இந்திரன், டி.காமராஜ், பெருங்களத்தூர் சேகர், ஏ.கே.கருணாகரன், இ.எஸ். பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ. வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தொ.மு.ச. பேரவைச் செயலாளர் இரா.பொன்னுராம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், க. தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மா.கணேஷ்பாபு, இரா. பாஸ்கரன், எம்.செல்வகுமார், சே.அருள்தேவி,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலகண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல். பிரபு, தி.க.பாஸ்கரன், எஸ். ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், பா.ஞானபிரகாசம், சசிகலா, த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், பொன். ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ். கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர்.ஜெய ராம்மார்த்தாண்டம், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள்:-

தி.மு.கழக பவள விழாவையொட்டி, தி.மு.க கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று சிறப்பிக்கும் மாபெரும் பொதுக்கூட்டம் - வருகிற 28.9.2024 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பன் ஆடவர் கல்லூரி விளையாட்டு திடலில் நடைபெறுகிறது.

நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் தி.மு.கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் சிறப்புரையாற்ற உள்ள இம் மாபெரும் கூட்டத்தில் தி.மு.க கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாநகரில் தி.மு.க கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று சிறப்பிக்கும் தி.மு. கழக பவளவிழா பொதுக் கூட்டத்தை, காஞ்சிபுரம் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. இணைந்து, பார்ப்போர் அனைவரும் வியக்கும் வகையில் மிகவும் பிரம்மாண்டமான மேடை அமைத்து எழுச்சியுடன் மாநாடு போல நடத்தப்பட உள்ளது.

மிகவும் கோலாகலமாக நடைபெற உள்ள -தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் அனைவரும் பங்கேற்கும் கழக பவள விழா மாபெரும் பொதுக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அணிகளின் மாவட்ட - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த கழகத்தினரும் பல்லாயிரக்கணக்கில் அலைகடலென அணிதிரண்டு வந்து பங்கேற்பது என்றும்,

இதுவரை, இதுபோன்ற பிரம்மாண்டமான பொதுக் கூட்டம் நடை பெற்றது இல்லை என்று தமிழக அரசியல் வரலாற்றில் புதியதோர் சரித்திர சாதனை படைத்திடும் வகையில், ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ள இந்த எழுச்சி மிக்க பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தில்,

செப்டம்பர் 28-ஆம் தேதி சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கெல்லாம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டுமொத்த கழகத்தினரும் அலைகடலென ஆர்ப்பரித்து திரண்டு வந்து பங்கேற்று சிறப்பித்து புதியதோர் வரலாற்று சாதனையை படைப்போம் என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

“இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை” என்ற உன்னத திட்டத்தை அறிவித்து, கழக இளைஞர் அணியில் புதிய உறுப்பினர்களை சேர்த்திட வேண்டும் என்று கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு அமைச்சர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அன்புக் கட்டளைக்கு இணங்க,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஒன்றிய-நகர-பேரூர்களில் அடங்கி உள்ள வார்டு-கிளைகளில் வீடு வீடாகச் சென்று புதிய உறுப்பினர்களை சேர்த்திடும் பணியில் கடந்த 1½ மாதமாக கழகத்தினரும் - இளைஞர் அணியினரும் மும்முரமாக சேர்த்து வருகின்றனர்.

அந்தந்த ஒன்றிய-நகர-பகுதி-பேரூர்களில் வெற்றிகரமாக சேர்த்து முடித்துள்ள இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை படிவங்களை அந்தந்த ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் கழகச் செயலாளர்கள் வருகிற செப்டம்பர் 30-ஆம் தேதிக்குள் மாவட்ட கழகத்திடம் கொண்டு போய் ஒப்படைத்திட வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக முடிவெடுக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் வடக்கு பகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டல தலைவருமான இ. ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பகுதி கழகம் நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ அன்பரசன் தேர்தல் களத்தில் பணியாற்றுவது குறித்தும் கழக ஆக்க பணிகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். அதைத்தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலில் சிறப்பாக பணியாற்றி அதிக வாக்குகளை பெற்று தந்த வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் 20 பேருக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து தங்க மோதிரம் அணிவித்தார். அப்பொழுது பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி, துணை மேயர் கோ. காமராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், பகுதி இளைஞரணி பொறுப்பாளர் எம். எஸ்.கே இப்ராகிம் ஆகியோர் உடன் இருந்தனர்.